**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

## மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 03.08.2016

### மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 15°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (03.08.2016 முதல் 07.08.2016)

### 1. மேற்கு மண்டலம்

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் வரும் 5 நாட்களுக்கு வானம் மேமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33° செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° ஆகவும், காற்றின் ஈரப்பதம் 60 முதல் 68 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19 கி.மீ அளவுக்கு வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- அதிகமான காற்றும், உடன் தூறல் மழையும் எதிர்பார்க்கப்படுவதால், வாழை மரங்கள் சாய்வதை தடுக்க 8 மாதத்திற்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுக்கவும்.
- அதிக மேகமூட்டமும் மற்றும் காற்றின் ஈரப்பதம் வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படுவதால் இறவை மஞ்சளில் நுண்ணூட்டச்சத்து குறைபாடு காணப்படும். இதனை தவிர்க்க ஒரு எக்டருக்கு 250 லிட்டர் தண்ணீரில் 375 கிராம் பெரஸ்சல்பேட், 375 கிராம் ஜிங்சல்பேட், 375 கிராம் போரக்ஸ் மற்றும் 375 கிராம் யூரியா கலந்து தெளிக்கவும்.
- வரும் நாட்களில் சமநிலை உஷ்ணம் எதிர்பார்க்கப்படுவதால், இறவை குளிர்கால கம்போடியா பருத்தி விதைப்பிற்கு நிலம் தயார் செய்யவும்.
- கறவை மாடு மற்றும் உழவு மாடுகளில் வாய் மற்றும் கால் குழம்புகளை கோமாரி நோய்க்காக பரிசோதனை செய்யவும்.

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 33°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ குறுவை நெற்பயிரில் தூர்கட்டும் பருவத்தில், 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 35 கிலோ யூரியாவையும், சாம்பல் சத்து உரமான 10 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும்.
- ✓ ஆகஸ்ட் 2ம் வாரத்தில் முன்பட்ட சம்பாவிற்கு சி.ஆர்.1009 மற்றும் ஆடுதுறை 50 என்ற இரகங்களை நாற்றுவிட சிபாரிசு செய்யப்படுகிறது.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 35°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 45 முதல் 72 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 3 முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் தக்காளியில் வெள்ளைஈயின் தாக்குதல் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைமீத்தோயேட் 30% EC @ 1 மி.லி./ லிட்டர் (அ) மாலத்தியான் 50% EC @ 1.5 மி.லி./ லிட்டர் என்ற இளவில் தெளிக்கவும்.
- ✓ மிக அதிகமான மேகமூட்டம் கொண்ட வானிலையால் வெண்டையில் தத்துப்பூச்சி தாக்குதல் தென்படுகிறது. தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டோபாஸ் 36 WSC @ 2 ம.லி. / லிட்டர் அல்லது டைமீத்தோயேட் 30 % EC @ 2 மி.லி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்
- ✓ வரும் தினங்களில் அதிக வேகத்துடன் கூடிய காற்று எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு முட்டு அணைக்கவும். தோட்டக்கால் பயிரில் நீர்பற்றாக்குறை ஏற்பட்டு பயிர் வாட வாய்ப்புகள் உள்ளது. எனவே தேவையான நீர்ப்பாசனம் செய்யவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களிலும் தேனி மாவட்டத்தில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 24°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 33°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 19°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 25°செ முதல் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 50 முதல் 80 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 8 முதல் 20 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ நெல் வயலில் தேவைக்கு அதிகமாக உள்ள நீரை வடிகட்ட வும்.
- ✓ மழை நீர் சூழ்ந்துள்ள நெல் வயல்களில் உடனடியாக வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை வடித்து வேர்பகுதிக்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்யவும்.
- ✓ திருந்திய நெல் சாகுபடியில் நடவு செய்த 20 – 25 நாட்களுக்குள் பயிரில் லேசான தண்ணீர் வைத்து கோனோ வீடர் களை எடுக்கும் கருவி மூலம் களைகளை மடக்கி விடவும்.
- ✓ நிலவும் குறைந்த வெப்பநிலையால் கால்நடைகள் குறைந்த அளவு தண்ணீர் உட்கொள்ளும். இதை அவ்வப்பொழுது கவனித்து போதுமான அளவு சுத்தமான தண்ணீர் கொடுக்கவும்.
- ✓ விவசாயிகள் தற்போது வேர்கடலை பயிருக்கு களை எடுக்க வும்.
- ✓ விவசாயிகள் கடலையில் காணப்படும் இலைப்புள்ளியினைக் கட்டுப்படுத்த கார்பன்டசிம் 1 மி.லி/லிட்டர் அல்லது மேன்கோசெப் 2 மி.லி / லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.
- ✓ கரும்பு பயிருக்கு 2.5 சதவீத அளவு பொட்டாஷ் மற்றும் யூரியா கலந்த தண்ணீரை 15 நாட்களுக்கு ஒரு முறை தெளிக்கலாம்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 20° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 90 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ ஜீலை மாதம் தேயிலை நாற்றுக்களை நட உரிய தருணமாகும். தோட்டக்கலைத் துறையில் தயாரக உள்ள தேயிலை நாற்றுக்களை மானிய விலையில் பெற்று பயனடைவீர்.
- ✓ தொடர் மழையின் காரணமாக, நோய் ஏற்படுவதை தடுக்க, ஒரு லிட்டர்தண்ணீருக்கு சூடோமோணஸ் 10 மில்லி , என்ற அளவில் பயிர்களின் மீது தெளிக்கவும்.
- ✓ ஏலக்காய் செடிக்கு, ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில், ஏக்கருக்கு, 10 டன் தொழு உரம், 33 கிலோ யூரியா, 84 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 50 கிலோ பொட்டாஷ் உரம் இடவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 35°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 52 முதல் 75 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 7கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது காணப்படும் தட்பவெப்பநிலை காரணமாக நிலக்கடலை பயிர்களில் செம்பேன் தாக்குதல் காணப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபர்கிட் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி வீதம் ஒட்டும் திரவம் கலந்து மாலை வேலையில் தெளிக்கவும்.
- ✓ தற்போது நிலவி வரும் தட்பவெப்பநிலை கோழிகளுக்கு உகந்ததாக காணப்பட்டாலும், மற்ற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் தானிய வகைகளிலும். கடலைப் புண்ணாக்கு போன்ற ஆலை உபபொருட்களிலும். பூஞ்சான நச்சு சற்றே உயர்ந்து காணப்படுவதால், தீவன மூலப்பொருட்களில் ஈரப்பதமும், பூஞ்சான நச்சு பரிசோதனையும் மேற்கொள்ள வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 34°செமுதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 58 மற்றும் 80 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 9 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ 5.8.16 முதல் 7.8.16 தேதி வரை இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ ஈரமான தீவனங்களில் பூஞ்சான நச்சு பரவ வாய்ப்புள்ளதால் அவற்றை கால்நடைகளுக்கு அளிப்பதை தவிர்க்கவும்.
- ✓ கால்நடைகளை குளம் குட்டைகளுக்கு அருகில் மேய்வதை தடுப்பதன் மூலம் புளுக் நோய் வருவதை தவிர்க்கலாம்.
- ✓ காய்ந்த வேம்பு மற்றும் நொச்சி இலைகளைக்கொண்டு கால்நடைக்குடில்களில் புகை மூட்டம் இடுவதால் நோய் பரப்பும் பூச்சிகளை விரட்டலாம்.
- ✓ பால் கறப்பதற்கு முன் நன்கு மடுவினை கழுவுவதன் மூலமும் மிக தூளான தீவனங்களை அளிப்பதை தவிர்ப்பதன் மூலமும் மடுவீக்க நோய் வருவதை தடுக்கலாம்.
- ✓ காய்கறி பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த 5 சதவீத வேம்பு விதை சாற்றினை தெளிக்கவும்.
- ✓ நெல்லில் காணப்படும் சாறு உறிஞ்சும் சிறு சிலந்தி பூச்சியான கட்டுப்படுத்த டைக்கோபால் 18.5 இ.சி மருந்தினை ஒரு எக்டருக்கு 250 மி.லி தெளிக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை எதிர்பார்க்கப்படவில்லை பகல்நேர வெப்பநிலை 32° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 83 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- *வரும் ஐந்து நாட்களில் பெரிய மழை பெய்ய வாய்ப்பு இல்லை . எனவே நெல் வயல்களில்* **5** *செ.மீ உயரத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டும்.*
- *நடவு செய்யப்பட்ட செடிகள், மற்றும் மரவாசனை மர செடிகளுக்கு நீர் பாய்ச்சவும்.*
- *நடவு செய்யப்பட்ட வாழை மரக் கன்றுகளுக்கு தொடர்ந்து நீர் பாய்ச்சவும்.*

***பேராசிரியர் மற்றும் தலைவர்,***
***வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,***
***த.நா.வே.ப.கழகம்,கோவை.***